# எளிய குறிப்புகள்

1. *சில புதுப்பிக்கும் பணிகளுக்கு கட்டட அனுமதி பெற வேண்டியிருக்கலாம். எனவே, வேலையைத் துவங்கும் முன்னால் உங்கள் நகராட்சியிடம் சரிபார்த்துக் கொள்ளுங்கள்.*
2. *ஒரு ஒப்பந்தக்காரரை அமர்த்துங்கள். வேறு யாரிடம் விசாரிக்கலாம் என்று கேட்டறியுங்கள்; வாக்குறுதிகள், உத்தரவாதங்கள் பற்றி நன்கு சரிபார்த்துக் கொள்ளுங்கள்.*
3. *உண்மையில் உங்களுக்கு என்ன தேவை என்பதை யோசித்து முடிவு செய்து கொள்ளுங்கள்; வேலை நடக்கும்போது இடையிடையே மாற்றினால் திட்டத்துக்கான செலவு அதிகரிக்கலாம்.*
4. *புதுப்பித்து விட்டதால் மட்டும் உங்கள் வீட்டின் மதிப்பு தானாகவே அதிகரித்து விடாது. தேவையற்ற புதுப்பிப்புப் பணிகளில் மாட்டிக் கொள்ளாதீர்கள்.*
5. *மூன்று அல்லது நான்கு ஒப்பந்தக்காரர்களிடம் உத்தேச மதிப்பீட்டை விளக்கமாக எழுதி வாங்குங்கள்; உங்கள் வீட்டைப் பார்வையிடாமலே மொத்தமாக ஒரு தொகையைச் சொல்லும் ஒப்பந்தக்காரரைத் தவிர்த்து லிடுங்கள்.*
6. *வீட்டுக்கு வீடு தேடிவரும் சிறப்புச்சேவையை சாதகமாகக் கருதி உடனே ஒப்பந்தத்தில் கையெழுத்திட அவசரப்பட்டு விடாதீர்கள்.*
7. *முதல் கட்டமாகச் செலுத்தும் அச்சாரத் தொகையை (down payment) மிகக் குறைவாக வைக்கவும் - மொத்தத் தொகையில் 10 சதவிகிதம் என்பது நியாயமானது. வேலை முடியும் முன்னால் முழுத்தொகையையும் ஒருபோதும் கொடுத்து விடாதீர்கள்.*
8. *நீங்கள் உடன்படுகிற எல்லா விஷயங்களும் - செலவு, துவங்கும் தேதி, முடியும் தேதி, குப்பையை அகற்றி சுத்தம் செய்வது யார் பொறுப்பு என எல்லாமே எழுத்து வடிவில் இருக்கிறதா என்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள்.*
9. *பெரும் தொகை செலவாகிற வேலையாயிருந்தால், ஒப்பந்தத்தில் கையொப்பம் இடுவதற்கு முன்னால் ஒரு வழக்கறிஞர் அல்லது நண்பர் ஒருவரிடம் காட்டி, படித்து விளங்கிக் கொள்ளுங்கள்.*
10. *ஒப்பந்தக்காரருக்கு நீங்கள் பணம் நிலுவை வைத்திருப்பது தொடர்பாகப் பிரச்சினை வந்தால், உங்கள் சொத்தைக் கையகப்படுத்த ஒப்பந்தக்காரர் உங்கள்மீது வழக்குத் தொடுக்கக்கூடும்.*

**கீழ்க்கண்ட விஷயங்களில் நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான கூடுதல் ஆலோசனைகள் www.cbs.gov.on.ca இணையத்தளத்தில் கிடைக்கும்:**

- நுகர்வோர் உரிமைகளைக் காத்துக் கொள்க
- பொருட்களை வாங்குதல்
- உங்கள் இல்லம்
- உறுப்பினராதல் மற்றும் சேவைகள்
- மோட்டார் வாகனங்கள்
- சொந்த நிதி விஷயங்கள்
- புகார் பதிவு செய்க
- அடையாளத் திருட்டு

அமைச்சினைப் பற்றிய பொதுவான தகவல்கள் அறிய **www.mgs.gov.on.ca** இணையத்தளத்திற்குச் செல்லுங்கள்; அல்லது அழையுங்கள்: **(416) 326-8555** அல்லது இலவசத் தொலைபேசி **1-800-268-1142** (ஒன்டாரியோவில்). TTY/டெலிடைப்ரைட்டர் பயன்படுத்துவோருக்கு மட்டும்: **(416) 325-3408** அல்லது இலவசத் தொலைபேசி: **1-800-268-7095**

தயவுசெய்து உங்கள் கருத்துகள், பதில்கள் மற்றும் கேள்விகளை அனுப்புக: **cbsinfo@cbs.gov.on.ca**

© Queen's Printer for Ontario 2005

ISBN 0-7794-8421-5



**03a**

**இல்லத்தைப் புதுப்பித்தல்**



# இல்லத்தைப் புதுப்பிப்பது குறித்து நீங்கள் அறிந்திருக்க வேண்டியவை

Ontario

*அறிவார்ந்த நுகர்வோர் வணிகத்துக்கு சிறந்தவர்கள்*

# அறிவார்ந்த நுகர்வோர் வணிகத்துக்கு சிறந்தவர்கள்

**நுகர்வோர் பாதுகாப்பில் ஒன்டாரியோ வழிகாட்டியாய் திகழ்கிறது. நுகர்வோருக்கும் வர்த்தகங்களுக்கும் தெளிவான விதிகளை வகுத்திருக்கிறது. உங்கள் உரிமைகளை அறிந்து கொள்ளுங்கள் – கூர்மதியுடன் வாங்கி சந்தையில் உங்களைக் காத்துக் கொள்ளுங்கள்.**

## இல்லப் புதுப்பிப்புப் பணிகள்

அரசுச் சேவைகள் துறை அமைச்சிடம் வரும் நுகர்வோர் புகார்களில் இரண்டாவது இடம் பெறுவது, வீடுகளைப் புதுப்பிப்பது தொடர்பான புகார்கள்தான். பெரும்பாலான புகார்கள் வேலை முடியாமை, வேலையின் தரம், உத்தரவாதம் தொடர்பானவை. உங்கள் இல்லத்தைப் புதுப்பிக்கும் பணிக்காக ஒரு ஒப்பந்தம் செய்யும்போது உங்களுக்கு சட்டப்படி பாதுகாப்பு உண்டு. சில முன்னெச்சரிக்கைகளைக் கைக்கொண்டால் பொதுவான புகார்களைத் தவிர்க்க முடியும்.

***எளிய குறிப்புகள்:***

- சில புதுப்பிக்கும் பணிகளுக்கு கட்டட அனுமதி பெற வேண்டியிருக்கலாம். எனவே, வேலையைத் துவங்கும் முன்னால் உங்கள் நகராட்சியிடம் சரிபார்த்துக் கொள்ளுங்கள். கட்டட அனுமதி பெறுவது உங்கள் பொறுப்பாகும். அனுமதி எதுவும் தேவையில்லை என்று ஒப்பந்தக்காரர் கூறினால், வேறு ஒப்பந்தக்காரரை அமர்த்துங்கள்.
- ‘நானே செய்து கொள்வேன்’ என்று சொல்வதற்கு ஏற்ற தொழில்முறைத் தகுதி இல்லாதவர் என்றால் ஒரு ஒப்பந்தக்காரரை அமர்த்துங்கள். வேறு யாரிடம் விசாரிக்கலாம் என்று கேட்டறியுங்கள்; வாக்குறுதிகள், உத்தரவாதங்கள் பற்றி நன்கு சரிபார்த்துக் கொள்ளுங்கள். ஒப்பந்தக்காரரின் நற்பெயரும், எத்தனை காலமாக தொழிலில் இருக்கிறார் என்பதும் முக்கியமானவை.
- உண்மையில் உங்களுக்கு என்ன தேவை என்பதை யோசித்து முடிவு செய்து கொள்ளுங்கள்; வேலை நடக்கும்போது இடையிடையே மாற்றினால் திட்டத்துக்கான செலவு அதிகரிக்கலாம்.
- புதுப்பித்து விட்டதால் மட்டும் உங்கள் வீட்டின் மதிப்பு தானாகவே அதிகரித்து விடாது. தேவையற்ற புதுப்பிப்புப் பணிகளில் மாட்டிக் கொள்ளாதீர்கள்.
- மூன்று அல்லது நான்கு ஒப்பந்தக்காரர்களிடம் உத்தேச மதிப்பீட்டை விளக்கமாக எழுதி வாங்குங்கள்; உங்கள் வீட்டைப் பார்வையிடாமலே மொத்தமாக ஒரு தொகையைச் சொல்லும் ஒப்பந்தக்காரரைத் தவிர்த்து விடுங்கள். சுட்டப்படும் தொகையில் பொருட்களும் கூலியும் அடங்கியுள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.
- வீட்டுக்கு வீடு தேடிவரும் சிறப்புச்சேவையை சாதகமாகக் கருதி உடனே ஒப்பந்தத்தில் கையெழுத்திட அவசரப்பட்டு விடாதீர்கள்.
- முதல் கட்டமாகச் செலுத்தும் அச்சாரத் தொகை (down payment) மிகக் குறைவாக வைக்கவும் – மொத்தத் தொகையில் 10 சதவிகிதம் என்பது நியாயமானது. வேலை முடியும் முன்னால் முழுத்தொகையையும் ஒருபோதும் கொடுத்து விடாதீர்கள்.
- நீங்கள் உடன்படுகிற எல்லா விஷயங்களும் – செலவு, துவங்கும் தேதி, முடியும் தேதி, குப்பையை அகற்றி சுத்தம் செய்வது யார் பொறுப்பு என எல்லாமே எழுத்து வடிவில் இருக்கிறதா என்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள்.
- பெரும் தொகை செலவாகிற வேலையாயிருந்தால், ஒப்பந்தத்தில் கையொப்பம் இடுவதற்கு முன்னால் ஒரு வழக்கறிஞர் அல்லது நண்பர் ஒருவரிடம் காட்டி, படித்து விளங்கிக் கொள்ளுங்கள்.
- ஒப்பந்தக்காரருக்கு நீங்கள் பணம் நிலுவை வைத்திருப்பது தொடர்பாகப் பிரச்சினை வந்தால், உங்கள் சொத்தைக் கையகப்படுத்த ஒப்பந்தக்காரர் உங்கள்மீது வழக்குத் தொடுக்கக்கூடும்.

***உங்கள் உரிமைகள்***

- உங்கள் நுகர்வோர் உரிமைகள், சட்டத்தின்படி பாதுகாக்கப்பட்டவை. உங்கள் உரிமைகளை எவரும் பறித்துக்கொள்ள முடியாது.
- இறுதிக்கட்டணம் உத்தேச மதிப்பீட்டில் தெரிந்ததை விட 10 சதவிகிதத்துக்கும் அதிகமாகப் போகக் கூடாது. இருப்பினும், பொருட்களும் சேவைகளும் கூடுதலாகத் தேவைப்பட்டால், செலவு மதிப்பீட்டை மாற்றிக் கொள்ள ஒப்பந்தக்காரரும் நுகர்வோரும் சேர்ந்து ஒப்புக் கொள்ளலாம்.

## மேலும் தகவல்கள் பெற இந்த இணையத்தைப் பார்க்கவும்

கனடிய வீடு கட்டுமானக்காரர்கள் சங்கம் *‘ஒப்பந்தக் காரரை நியமித்தல்’*.
**www.hiringacontractor.com**

## உதவி தேவையா?

அரசுச் சேவைகள் துறை அமைச்சிடம் (Ministry of Government Services) ஒரு புகார் பதிவு செய்வதற்கு முன்னால் கீழ்க்கண்ட வழிமுறைகளைப் பின்பற்றவும்:

1. நிறுவனத்தைத் தொடர்பு கொண்டு உங்கள் புகாரைப் பற்றி குறிப்பாக விளக்கவும்.
2. புகாரை எழுத்து வடிவில் தரவும். அதை டெலிவரி செய்ததற்கான ஆதாரத்தையும், நிறுவனத்துடன் மேற்கொண்ட வேறெந்தக் கடிதங்களையும் வைத்திருக்கவும்.
3. அப்போதும் திருப்தி கிடைக்கவில்லை என்றால், எமது இணையத் தளத்தில் முறையாக புகார் பதிவு செய்ய **www.mgs.gov.on.ca** இணையத்திற்குச் செல்லவும். அதில் ‘Online Services’ என்ற பிரிவிற்குச் செல்லவும்.

## மேலும் தகவல்கள் பெற

இது குறித்தும், நுகர்வோர் பாதுகாப்பு சம்பந்தமான இதர விஷயங்கள் குறித்தும் மேலும் விவரம் அறிய, அரசுச் சேவைகள் துறை அமைச்சின் (Ministry of Government Services) **www.mgs.gov.on.ca** இணையத் தளத்திற்குச் செல்லுங்கள். அல்லது **(416) 326-8555** என்ற எண்ணை அல்லது இலவசத் தொலைபேசி **1-800-268-1142** என்ற எண்ணை அழைக்கவும். TTY தொலைபேசி எண் – **(416) 325-3408** அல்லது இலவசத் தொலைபேசி **1-800-268-7095.**